Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.263/2025, Cr.No.83/2024, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| பெயர் | MG |
|---|---|
| வயது | 60 |
| தந்தை/கணவர் பெயர் | முனியன் |
| கிராமம் | செவ்வாத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | வியாபாரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16th day of April 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை (எதிரிகள் ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மாட்டு வியாபாரியாக வேலை செய்து வருகிறேன். கடந்த வருடம் நான் வியாபாரத்திற்காக சென்றிருந்தபோது, கோட்டபதி அருகே கூட்டமாக இருந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 01.02.2024 அன்று காலை 08.30 மணியளவில் சின்னசொக்கனம்பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே நீர்த்தேக்கத் தொட்டி அருகே உள்ள மாடுகளை ஏற்றிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அங்கு, மளிகைக் கடை வைத்திருக்கும் கார்த்திகேயன் இருந்தார் என்றால் சரியல்ல. எங்கள் ஊரைச் சார்ந்த கலைச்செல்வன் என்பவரும் சம்பவயிடத்தில் நின்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. பின்னர் காலை 08.45 மணியளவில் எங்கள் ஊரைச் சார்ந்த கோவிந்தராஜ் மகன் மணி, மாது மகன் யுவராஜ், வேடியப்பன் மகன் விஜய் ஆகியோர்கள் அங்கு

வந்தார்கள் என்றால் சரியல்ல. யார் என்று எதிரிகளை கலைச்செல்வன் பார்த்தபோது, எதிரிகள் மூவரும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, "என்னடா எங்களைப் பார்த்து முரைக்கிறாய்" என்று கையால் மாறி மாறி முதுகின் மீதும், கண்ணத்தின் மீதும் அடித்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரியானவர் கலைச்செல்வன் கையில் இருந்த மாட்டு கயிறைப் பிடுங்கி கலைச்செல்வனின் கழுத்திலும், வலது பக்க இடுப்பின் மீதும் ஓங்கி ஓங்கி அடித்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நானும், கார்த்திகேயனும் மேற்படி சண்டையை விலக்கினோம் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் அனைவரும் கலைச்செல்வனை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தை நேரடியாகப் பார்த்தததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது, எதிரிகள் அனைவரும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:- இல்லை</u>**

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.